SC. 323/17 PW 16 விஜயேந்திரன் 1.8.2018 3

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**குறு வி :--- அனைத்து எதிரிகள் தரப்பில்**

ஆய்வுக்கு கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்துடன் வழக்கின் வரலாறு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய பொருட்கள் அனைத்தும் ஒரே மர பெட்டியில் போடப்பட்டு சீலிடப்பட்டு ஆய்வகத்தில் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மர பெட்டியில் காணப்பட்ட ஒரு சீல் தவிர வேற எந்த சீலும் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மேற்படி பெட்டியிலுள்ள பொருட்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக கவரிடப்பட்டிருந்தது. அவை ஒவ்வொன்றும் தனித்தனியாக சீலிடப்பட்டிருந்தது. ஆனால் **அசாஆ 18 ல் மேற்கண்டவாறு மர பெட்டிக்குள் இருந்த பொருட்கள் தனித்தனியாக கவரிடப்பட்டு சீலிடப்பட்டிருந்ததாக குறிப்பு ஏதுமில்லை என்றால் சரிதான்.** காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது மேற்படி ஒவ்வொரு பொருட்களும் **தனித்தனியாக கவரிடப்பட்டு சீலிடப்பட்டிருந்ததாக கூறவில்லை என்றால் சரிதான்.** என்னுடைய முதல் விசாரணையிலும் மேற்கண்டவாறு கூறவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்காக பொருட்களும் **தனித்தனியாக கவரிடப்பட்டு சீலிடப்பட்டிருந்ததாக** பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்தவரின் ரத்த வகையை கண்டறியும்பொருட்டு வேண்டுகோள் கடிதம் ஏதும் சமர்பிக்கப்படவில்லை

என்றால் சரிதான். இறந்தவரின் ரத்த மாதிரி அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக ரத்தம் 4 வகை பிரிவுகள் கொண்டது என்றால் சரிதான். அவைகளில் A+ , A- என்ற உட்பிரிவுள்ளது என்றால்சரிதான். ரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்களை உள் ஆய்வு செய்யும் பட்சத்தில் அதன் **+, -** போன்ற வகைபாடு தெரிய வரும் என்றால் சரிதான். ஆனால் ரத்தம் உறைந்து போயிருக்கும் பட்சத்தில் சிகப்பு அணுக்களை பகுப்பாய்வு செய்து மேற்கண்ட **+, -** போன்ற வகைபாடு தெரிய வராது. அசாஆ 18 ல் கண்டறியப்பட்ட ரத்தம் **+, -** என்று வகைபடுத்தி சொல்ல இயலவில்லை என்றால் சரிதான். A குரூப் ரத்தம் பொதுவாக அதிகமான நபர்களுக்கு காணப்படும் என்றால் சரிதான். உறையாமல் இருந்திருக்கும் பட்சத்தில் இறந்து போன நபரின் ரத்தத்தின் சிகப்பு அணுக்களை பரிசோதித்து அதன் உள் வகை குருப் குறித்து கூற இயலும் என்றால் சரிதான். உறைந்த ரத்தத்தில் உள் வகை குருப் கண்டறிய இயலாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி அசாஆ 17, 18 முழுமை பெற்றதல்ல என்றால் சரியல்ல. பொதுவாக பெப்சி , கோக் , பேண்டா, 7up, டொரினோ போன்ற குளிர்பானங்களில் பூச்சி கொல்லி மருந்து சிறிதளவு இருக்கும் என்றால் சரிதான்.

ம வி ---

இல்லை.